# 21 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## மாநாடுகள் மற்றும் ஒப்பந்தம்

### "பண்டைய தைக்கப்பட்ட கப்பல் கட்டும் முறையை (டாங்காய் முறை)" புதுப்பிக்க கலாச்சார அமைச்சகமும் இந்திய கடற்படையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன

- **2000 ஆண்டு** பழமையான கப்பல் கட்டும் தொழில் நுட்பமான டாங்காய் முறைக்கு புத்துயிர் அளிக்கவும், பாதுகாக்கவும் **கலாசார அமைச்சகமும் இந்திய கடற்படையும்** புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- **டாங்காய் முறை** என்பது 2000 ஆண்டுகள் பழமையான கப்பல் கட்டும் நுட்பமாகும். இது 'தையல் கப்பல் கட்டும் முறை' என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த முறையில், கப்பல்கள் ஆணிகளைப் பயன்படுத்துவதை விட மரப் பலகைகளை ஒன்றாக தைத்து கட்டப்படுகின்றன.
- இந்த முறை கப்பல்களுக்கு **வளைந்து கொடுக்கும் தன்மை மற்றும் நீடித்துழைப்பை** வழங்குகிறது.

### மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், ஊரக நீர், துப்பரவு மற்றும் சுகாதார மன்றத்தின் இரண்டு நாள் தேசிய மாநாட்டை இன்று தொடங்கி வைக்கிறார்.

- ஜல் ஜீவன் மற்றும் ஸ்வச் பாரத் மிஷனை விரைவாக செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் முன்னேற்றம் மற்றும் முன்னோக்கி செல்லும் வழிகள் குறித்து விவாதிக்க
- **"ஸ்வச் சுஜல் பாரத்** நோக்கிய முன்னேற்றத்தை விரைவுபடுத்துதல்" என்ற கருப்பொருளின் கீழ், கூட்டாளர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள உதவும்

ஊரக நீர், துப்பரவு மற்றும் சுகாதார மன்றம் (RWPF) என்பது இந்தியாவின் கிராமப்புற நீர், துப்பரவு மற்றும் சுகாதார துறையில் பணிபுரியும் மேம்பாட்டு பங்காளிகள் மற்றும் துறை பங்குதாரர்களுக்கான முன்னணி தளமாகும்.

## பாதுகாப்பு

### இந்திய விமானப் படைக்கு உள்நாட்டு செயற்கைக்கோள் கண்காணிப்பு அமைப்பு

- விமானங்களின் இருப்பிடம் குறித்து தகவல்களைப் பெறுவதற்கு செயற்கைக்கோள் அடிப்படையிலான நிகழ் நேர விமான கண்காணிப்பு அமைப்பை இந்திய விமானப் படை யின் பராமரிப்புப் பிரிவு உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது.
- இந்திய விமானப் படை விமானங்களின் இருப்பிடம் குறித்த தகவல்களை **30 விநாடிகளில்** பெறும் வகையில் பராமரிப்புப் படைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள 'பேஸ் ரிப்பேர் டிப்போ (பிஆர்டி), உள்நாட்டிலேயே இந்த விமான கண்காணிப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது.
- **இந்தக் கண்காணிப்பு அமைப்பு செயற்கைக்கோள் அடிப்படையிலானது**

- விமானத்தின் பாதையை எளிதாகக் கண்கா ணித்து பின்தொடரக் கூடியது

இந்திய விமானப் படையின் பராமரிப்புப் பிரிவு தலைமைத் தளபதி ஏர் மார்ஷல் விபாஷ் பாண்டே

## விருதுகள் & கௌரவங்கள்

### இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 7 வயது சிறுமி இங்கிலாந்து பிரதமரின் "பாயிண்ட்ஸ் ஆஃப் லைட்" விருதை வென்றுள்ளார்.

- லண்டனைச் சேர்ந்த ஏழு வயது இந்திய வம்சாவளி சிறுமி மோக்ஷா ராய் தனது மூன்று வயதில் "மைக்ரோபிளாஸ்டிக் மாசுபாட்டிற்கு" எதிராக ஐநா பொதுச் சபையின் நிலைத்தன்மை முயற்சிகளுக்காக இங்கிலாந்து பிரதமரின் "பாயிண்ட்ஸ் ஆஃப் லைட்" விருதைப் பெற்றுள்ளார்.
- கடந்த வாரம் பிரிட்டிஷ் துணைப் பிரதமர் ஆலிவர் டவுடனிடம் இருந்து "உலகின் இளைய நிலைத்தன்மை வழக்கறிஞர்" என்ற இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### 2023 ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.




- மாலத்தீவில் உள்ள துலிஸ்தூ தீவில் நடைபெற்ற 18 நாடுகளின் ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் 2023ல் இந்தியாவின் சர்ஃபிங் அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது.
- இந்திய சர்ஃபிங் ஃபெடரேஷன் ஆடவர் பிரிவில் கிட்டத்தட்ட 4 சீனியர் சர்ஃபர்ஸ் மற்றும் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் 2 சர்ஃபர்ஸ் கொண்ட குழுவை சாம்பியன்ஷிப்பிற்காக களமிறக்கியது.
- இதில் சிறந்த விஷயம் என்னவென்றால், 6 சர்ஃபர்களில் 5 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

### ஐஎஸ்எஸ்எஃப்(ISSF) உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் கலப்பு டீம் ஸ்கீட் போட்டியில் இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கம்.



- ஜூலை 19 அன்று கொரியாவின் சாங்வோனில் நடந்த ISSF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியின் 4வது நாளில் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணி பதக்கப் பட்டியலில் 2வது இடத்தைப் பிடித்தது.
- கலப்பு டீம் ஸ்கீட் பிரிவில் இந்தியாவின் சஞ்சனா சூத் மற்றும் ஹர்மெஹர் சிங் லல்லி ஜோடி 26–24 என்ற புள்ளி கணக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றது.

## FIFA தரவரிசை அறிவிக்கப்பட்டது, சமீபத்திய தரவரிசையில் இந்தியா 99 வது இடத்தைப் பிடித்தது

- சமீபத்திய FIFA ஆடவர் உலக தரவரிசை புதுப்பிப்பில், சர்வதேச கால்பந்தில் முன்னேற்றம் காட்டும் இந்தியா 99 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ப்ளூ டைகர்ஸ் என்று அழைக்கப்படும் இந்திய அணி சமீபத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது,
- இன்டர்காண்டினென்டல் கோப்பை மற்றும் SAFF சாம்பியன்ஷிப் இரண்டையும் உறுதி செய்தது. அவர்களின் சிறப்பான ஆட்டம் தரவரிசையில் ஒரு இடத்துக்கு முன்னேற வழிவகுத்தது.

| |
|---|
| சமீபத்திய FIFA தரவரிசையில், அர்ஜென்டினா தொடர்ந்து முதலிடத்திலும், பிரான்ஸ் மற்றும் பிரேசில் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்திலும் உள்ளன. |

## மகளிர் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் 9–ஆவது எடிஷன் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நியூஸிலாந்தில் வியாழக்கிழமை தொடங்கியது.

- வெற்றியுடன் தொடங்கிய நியூஸி., ஆஸி.மைதானத்தில் அந்நாட்டின் ஆக்லாந்து நகரில் நடைபெற்றது
- முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து 1–0 கோல் கணக்கில் நார்வேயையும், ஆஸ்திரேலியாவின் ரசிகர்கள் சிட்னி நகரில் நடைபெற்ற 2–ஆவது ஆட்டத்தில் அதே கோல் கணக்கில் அயர்லாந்தையும் வீழ்த்தி போட்டியை வெற்றியுடன் தொடங்கியுள்ளன.
- பழங்குடியினருக்கு...: உலகக் கோப்பை போட்டியை இணைந்து நடத்தும் நியூஸிலாந்து, ஆஸ்தி ரேலியா நாடுகளின் பழங்குடியின மக்களுக்கு தொடக்க நிகழ்ச்சியில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- உலகக் கோப்பை போட்டியில் பயன்படுத்தப்படும் அதிகாரபூர்வ பந்துகள், கலந்துகொண் டுள்ள ஒவ்வொரு அணிக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட் டன.
- அத்துடன் போட்டியில் பங்கேற்றுள்ள 32 நாடுகள் குறித்த காணொலி பதிவு பிரம்மாண்டமாக திரை யிடப்பட்டு அவை அறிமு கம் செய்யப்பட்டன.
- கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற நடனக் கலைஞர்கள், அந்த 32 அணிகளின் ஜெர்ஸிக்களை அணிந்திருந்தனர்.
- முதல் வெற்றி நார்வேக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து 1–0 கோல் கணக்கில் வென்றது. அந்த அணிக்காக ஹன்னா வில்கின்சன் 48–ஆவது நிமிஷத்தில் கோலடித்தார்.
- இதன் மூலம், உலகக் கோப்பை போட்டியின் வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு ஆட்டத் தில் வென்றிருக்கிறது
- அந்த அணி இறுதியில், ஆக்லாந்து நகரில் வியாழக்கிழமை காலை நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானோருக்கு சிறிது நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, தொடக்க நிகழ்ச்சி நிறைவு செய்யப்பட்டது.

# புவியியல் மற்றும் சுற்றுச்சூழல்

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

- வடக்கு மலுக்கு மாகாணம், சனானா நகருக்கு 85 கி.மீ. வடகிழக்கே, கடல் பகுதியில் வியாழக்கிழமை மதியம் 12.31 மணிக்கு (உள் ளூர் நேரம்) நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில்5.1 அலகுகளாகப் பதிவானது.

- 27 கோடி மக்கள்தொகையைக் கொண்ட இந்தோனேசிய தீவுக் கூட்டம், புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் நெருப்பு வளையம்' என்றழைக்கப்படும் பகுதியில் அமைந் துள்ளது;
- இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.
- அங்கு கடந்த 2004–இல் ஏற் பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து உருவான சுனாமியில் இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 2.3 லட்சம் பேர் பலியானது நினைவுகூரத்தக்கது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## புவியின் 4–வது சுற்றுவட்ட பாதையில் 'சந்திரயான்–3'

- நிலவின் தென் துருவத்தில் ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட சந்திரயான்–3 விண்கலம், புவி வட்டத்தின் நான்காவது சுற்றுப் பாதைக்குள் வெற்றிகரமாக வியாழக்கிழமை செலுத்தப்பட்டது.
- அதற்கு அடுத்தடுத்த நிலைகள் வெற்றி பெறும்பட்சத்தில் திட்டமிட்டபடி ஆகஸ்ட் 1–ஆம் தேதி நிலவின் ஈர்ப்பு விசைக்குள் சந்திரயான்–3 விண்கலம் அனுப்பப்படும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

- நிலவின் பரப்பில் தரையிறங்கி பல்வேறு ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ரூ.615 கோடி செலவில் சந்திரயான்–3 திட்டம் வடிவமைக்கப்பட்டது.
- கனரக செயற்கைக்கோள்களை தாங்கிச் செல்லும் எல்விஎம்–3 ராக்கெட் மூலம் கடந்த 14–ஆம் தேதி சந்திரயான்–3 விண்கலம் விண்ணில் செலு த்தப்பட்டது.
- அதற்கு அடுத்த நாளில் புவி வட்டப் பாதையின் முதல் நிலையில், அதாவது 173 கிலோ மீட்டர் அருகமை தொலைவிலும், 41,762 கிலோ மீட்டர் தொலைவு தூரத்திலும் உள்ள முதலாவது சுற்றுப் பாதைக்குள் சந்திரயான்–3 உந்தித் தள்ளப்பட்டது.
- கடந்த திங்கள்கிழமை (ஜூலை 17) இரண்டாவது சுற்றுப் பாதையான 226 கிலோ மீட்டர் அருகமை தொலைவு, 41,603 கிலோ மீட்டர் தொலைவு தூரப் பகுதிக்குள் செலுத்தப்பட்டது.
- அதன் தொடர்ச்சியாக கடந்த 18 ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) மூன்றாவது சுற்றுப் பாதைக்குள்ளும் வியாழக்கிழமை வெற்றிகரமாக நான்காவது சுற்றுப் பாதைக்குள் செலுத்தப்பட்டது. பெங்களூரில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையம் இத்தகவலை தெரிவித்துள்ளது.
- மொத்தம் 5 நிலைகள் உள்ள நிலையில், வருகிற ஜூலை 25 ஆம் தேதி பிற்பகல் 2–3 மணியளவில் 5– வது சுற்றுப்பாதைக்குள் செலுத்தப்படும் என்றும் இஸ்ரோ கூறியுள்ளது.

## தேசிய நடப்பு நிகழ்வுகள்

### இந்தியா புதுதில்லியில் பாரம்பரிய மருந்துகள் பற்றிய ஆசியான் நாடுகளின் மாநாட்டை நடத்தியது

- ஏறக்குறைய பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்தியா–ஆசியான் மாநாடு நடைபெறுகிறது, இதில் கம்போடியா, வியட்நாம் உள்ளிட்ட **10 ஆசியான் நாடுகள்** பங்கேற்றன
- இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கு இடையேயான சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், பாரம்பரிய மருத்துவத் துறையில் எதிர்கால ஒத்துழைப்புக்கான தளத்தை வலுப்படுத்துவதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆயுஷ் அமைச்சகம் **ஐக்கிய ராஜ்ஜியம் ,ஐக்கிய அமெரிக்க நாடுகள் , ஜப்பான், பிரேசில்** மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த பல உயர்தர சர்வதேச நிறுவனங்களுடனும், CSIR, DST, DBT, **மற்றும் IIT கள்** போன்ற தேசிய நிறுவனங்களுடனும் பல்வேறு தொற்றாத நோய்களான நீரிழிவு நோய், புற்றுநோய், மனநலம் மற்றும் கோவிட் போன்ற தொற்று நோய்கள் போன்றவற்றில் உயர்தர ஆராய்ச்சியை மேற்கொள்கிறது.

> 9 நவம்பர் 2014ம் ஆண்டு முதல், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இருந்த ஆயுஷ் துறையை, **சுதந்திரமான ஆயுஷ் அமைச்சகமாக தரம்** உயர்த்தப்பட்டது

### ஜனாதிபதி திரௌபதி முர்மு புது தில்லியில் இரண்டு நாள் நூலக விழா 2023 ஐத் தொடங்கி வைக்கிறார்

- நூலகங்களின் இரண்டு நாள் திருவிழா 2023 அடுத்த மாதம் 5 ஆம் தேதி பிரகதி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்படும்.
- ஜனாதிபதி திரௌபதி முர்மு விழாவை துவக்கி வைக்கிறார்.
- புது தில்லியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மத்திய கலாச்சாரத் துறை இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், இந்த விழா புறநிலை மற்றும் டிஜிட்டல் நூலகங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் என்றார்.
- புறநிலை நூலகத்தின் முக்கியத்துவம் எப்போதும் நிலைத்திருக்கும் என்றார். நூலகங்களை மேம்படுத்துவதே அரசின் முன்னுரிமை என்றார்.
- இந்த விழாவானது 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' இன் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாகும், மேலும் இது நூலகங்களின் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிப்பதற்கும், இந்தியாவில் வாசிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் பிரதமரின் பார்வைக்கு ஏற்ப உள்ளது.

## மாநில நடப்பு நிகழ்வுகள்

### நாட்டின் முதல் 'செயற்கைக்கோள் நெட்வொர்க் போர்டல் தளத்தை' குஜராத் பெறவுள்ளது

- **ஒன்வெப் மற்றும் மாநில அரசு** இடையே காந்திநகரில் ஜூலை 19, 2023 இல் மெஹ்சானா அருகே செயற்கைக்கோள் நெட்வொர்க் போர்டல் தளத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- மெஹ்சானா மாவட்டத்தின் ஜோடானா தாலுகாவில் இரண்டு இடங்களில் செயற்கைக்கோள் நெட்வொர்க் போர்டல் அமைக்கப்படும் இதன் மதிப்பீட்டில் முதல் கட்டத்திற்கு **ரூ. 100 கோடி.** ஒதுக்கீடு
- டிஜிட்டல் இந்தியாவின் கீழ் இந்த திட்டம், நாடு முழுவதும் உள்ள கிராமங்கள், மாவட்ட பஞ்சாயத்துகள், உள்ளூர் நிர்வாக அமைப்புகள், அரசு துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு மலிவு, பாதுகாப்பான மற்றும் அதிவேக இணைய அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாநிலத்தில் சுமார் **500 நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை** உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.